## பொல்லாத பொறாமை

வாசிக்க: ஆதியாகமம் 4:1-16

***"மன அமைதி உடல் நலம் தரும்; பொறாமையோ எலும்புருக்கி" (நீதி 14:30)***

பொறாமை தம்மில் இல்லையென பலர் நினைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அண்டை வீட்டாருக்கு 10 கோடி பரிசு விழுந்து, அவர்கள் வாகனம், வீடு, நிலம் வாங்க ஆரம்பித்தால் அப்பொழுதுதான் நம்மில் பொறாமைக்குணம் உண்டா, இல்லையா எனத் தெரியும்.

தன்னைவிடப் பிறர் நல்ல நிலைமையில் இருந்தால் ஒருவருக்கு எழும்பும் காழ்ப்புணர்வே பொறாமை எனப்படும். பொறாமை எனும் வேர் முளைத்தால் இது நாளடைவில் கலகம், கொடுஞ்செயல்களெனும் மரத்தை விளைவிக்கும் (யாக் 3:16). இது மாம்சீகத்தின் அடையாளம் (1 கொரி 3:3). இது தெய்வீக ஞானமல்ல, பேய்த்தனத்தின் கனி எனத் திருமறை கூறுகிறது (யாக் 3:14-17). இது மூர்க்கத்தை விடக் கொடுமையானது (நீதி 27:4); இது ஓர் இருளின் செயல் (ரோ 13:13; கலா 5:21). பொறாமையே பல வியாதிகளுக்குக் காரணம் (நீதி 14:30). ஆன்மீக வளர்ச்சியைப் பொறாமை தடுத்துவிடுகிறது (1 பேது 2:1,2).

சகோதர, சகோதரிகளிடையே பொறாமை ஏற்படுவதை நாம் திருமறையில் வாசிக்கிறோம். ஆபேலைக் கடவுள் அங்கீகரித்தபோது அவனது அண்ணன் காயீனும், யோசேப்பைக் கடவுள் ஆசீர்வதித்தபோது அவன் உடன் சகோதரரும் பொறாமை கொண்டனர் (ஆதி 4:4,5; 37:5,11). ராகேல் தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டாள். ஒருவர் உலக வேலையில் நல்ல நிலைமையிலிருக்கும்போதும், ஞானமாய் நடக்கும்போதும் பிறர் அவர்மீது பொறாமைகொள்கின்றனர் (தானி 6:3,4). ஆன்மீக வட்டாரங்களில் கடவுள் வேறொருவரைச் சிறப்பாகப் பயன்படுத்தும்போதோ (1 சாமு 18:6,9), வேறொருவர் அற்புத அடையாளங்கள் செய்யும்போதோ (மாற் 9:38,39; லூக் 9:49,50) பொறாமை வருகிறது. இயேசுவும் இதில் இலக்கானார் (மாற் 15:9).

கடவுள் மற்றவருக்குக் கொடுத்ததைவிட நமக்குக் குறைவாய் இருக்கலாம்; ஆனால் அதில் நாம் மனநிறைவு கொள்ளவேண்டும். அப்போதுதான் பொறாமை வராது (மத் 20:11-15). பிறரை நமக்கு மேலாகக் கடவுள் உயர்த்தினால் சவுலைப் போல நாம் பயமோ, பாதுகாப்பற்ற உணர்வோ கொள்ளத் தேவையில்லை (1 சாமு 18:8,9; யோ 12:19). ஆன்மீகக் காரியங்களில் பிறர் நம்மைவிடப் புகழ்பெறும்போது இதனால் கடவுளுக்குத்தான் வெற்றியும், அவர் அரசுக்குத்தான் இலாபமும் என உணரவேண்டும். "யார்" செய்கிறார் என்பது பெரிதல்ல (1 கொரி 3:5-9).

பொறாமைக்கு நாம் இலக்கானால் நாம் பெருமையடையாது, கடவுளது வசனத்தின் புடமிடுதலுக்கு யோசேப்பு தொடர்ந்து ஒப்புவித்ததுபோல நம்மை நாம் ஒப்புவிக்கவேண்டும் (சங் 105:19; அப் 7:9). பொறாமையினால் இயேசுவுக்கு விடுதலை கொடாமல் பரபாசைப் பிலாத்து விடுவித்தபோதும், இயேசு பொறுமையாய்த் தந்தையாகிய கடவுளுக்குத் தம்மைப் பூரணமாய் ஒப்புக்கொடுத்தார் (மாற் 15:9,10; 1 பேது 2:19-23). வேலையில் பொறாமைக்கு இலக்கானபோது தானியேல் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் தொடர்ந்து உண்மையையும், நேர்மையையும் காத்துக்கொண்டான் (தானி 6:3,4). நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்!

*பொறாமை பாசங்களை நாசமாக்கும்; எண்ணங்களைக் கறைப்படுத்தும்!*